# நேசரின் ஒளி

# Nesarin Oli


மலர் 5 | இதழ் 10 | இலவசப்பிரதி | ஆகஸ்ட் 2018

Malar 5 | Issue 10 | Free Distribution | August 2018




**கர்த்தர் தமது ஜனத்திற்குப் பெலன் கொடுப்பார்**
**கர்த்தர் தமது ஜனத்திற்குச் சமாதானம் அருளி**
**அவர்களை ஆசீர்வதிப்பார். - சங் 29:11**




**Rev. V.** *இஸ்ரவேல் தேவதாசன்*

# முகவுரை

## ஆகஸ்ட் மாதத்தின் வாக்குத்தத்தம்

**கர்த்தர் தமது ஜனத்திற்குப் பெலன் கொடுப்பார்**
**சமாதானம் கொடுப்பார், ஆசீர்வதிப்பார். (சங் 29:11)**

கிறிஸ்துவின் அன்பான தேவனுடைய பிள்ளைகளே, இந்த ஆகஸ்டு மாத பத்திரிக்கையை வெளியிட தேவன் பாராட்டின பெரிதான கிருபைகளுக்காக கோடான கோடி ஸ்தோத்திரங்களை செலுத்துகிறேன். இதனை வாசிக்கும் பிள்ளைகள் அனைவருக்கும் கர்த்தர் ஆசீர்வாதத்தையும், சமாதானத்தையும், சந்தோஷத்தையும் தந்து, உங்களை பெலப்படுத்தி, உங்கள் அனைவரையும் பரிபூரணத்திற்க்குள் கொண்டுவருவாராக.
தேவன் நமக்குத் தந்தருளின எல்லா ஊழியங்களுக்காகவும் ஜெபித்து வருகிறீர்கள். விஷேமாக ஊத்துக்குளி, குறிஞ்சி நகர், கொளத்தூர், பெரியார்நகர், திருச்செந்தூர்-மெய்ஞானபுரம் ஊழியங்களுக்காகவும் ஜெபியுங்கள், எல்லா மிஷனரிகளுக்காகவும் ஜெபியுங்கள். சிறுவர் ஊழியம், வாலிபர் ஊழியம், பெண்கள் ஐக்கியத்திற்காகவும் ஜெபியுங்கள். சுவிசேஷம் செல்ல முடியாத எல்லா இடங்களிலும் தேவனுடைய சுவிசேஷம் தடை இல்லாமல் செல்லும்படியாக ஜெபியுங்கள். தேவ பிள்ளைகள் கொடுத்த அநேக சாட்சிகளுக்காக தேவனை மகிமைப் படுத்துகிறேன்.
விசேஷமாக 24 மணி நேர ஜெப ஊழியத்திற்காக ஜெபியுங்கள். அதில் வாலிபர்கள் பெற்றோருக்கு கீழ்ப்படியவும், போதை வஸ்துகள், மதுபானம், அசுத்தமான படங்கள், செல்போன், இன்டர்நெட், பேஸ்புக், உலக சிற்றின்பங்கள், தற்கொலை எண்ணங்கள், விபத்துகள், வேலை இல்லாததினால் ஏற்படும் மன அழுத்தத்தினால் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டு, பாவத்திற்குள்ளாகாமல், தேவ சித்தத்திற்க்கு ஒப்புக்கொடுத்து, அநுதினமும் வேதம் வாசித்து, ஜெபித்து கர்த்தருக்காக வைராக்கியமாக எழும்பி, சபைக்கும், குடும்பத்திற்கும், சமுதயாத்திற்கும் சாட்சியாக நிற்கவும் ஊக்கமாக ஜெபிப்போம். கிறிஸ்தவ வாலிபர்கள் பின்மாற்றத்தில் இருந்து விடுதலை பெற்று, தேவனோடு ஐக்கியப்படவும், செயின் பறிப்பு, கொலை, கொள்ளை, மிரட்டல், போன்ற துணிகரமான பாவங்களை விட்டு விலகவும், ஆவிக்குரிய வளர்ச்சியடையவும், ஊழிய வாஞ்சை உள்ளவர்களாய் மாறவும் உபவாசத்தோடும், கண்ணீரோடும் ஜெபிப்போம்.

கிராம ஊழியங்களுக்கு செல்லும் எல்லா பிள்ளைகளுக்காகவும் தேவனை ஸ்தோத்தரிக்கிறேன். தேவன் அவர்களை எல்லாவிதமான கிருபை வரங்களினால் நிறைத்து, தடையில்லாமல் தொடர்ந்து ஊழியம் செய்யுவும், அநேக பிள்ளைகள் இரட்சிக்கப்படவும் ஜெபிப்போம். வியாதியில் கட்டப்பட்டிருக்கும் குடும்பங்களுக்காகவும், கடன் பிரச்சனை உள்ளவர்களுக்காகவும் வேலை இல்லாதவர்களுக்காகவும் ஜெபியுங்கள். விஷேமாக கேன்சர் வியாதி மற்றும் கிட்னி பிரச்சனை உள்ளவர்களுக்காக ஜெபியுங்கள்.

ஒவ்வொருவரும் கிறிஸ்துவுக்குள் ஐக்கியமாக இருக்கவும், தேசத் தலைவர்கள், மதத் தலைவர்கள் இரட்சிக்கப்படவும், இந்திய தேசத்தில் சமாதானம் உண்டாகவும், நம்முடைய தேசத்தை நன்மையினால் நிரப்பவும் ஜெபிப்போம். நம்முடைய சபை வலது, இடதுபுறம் பெருகவும், ஊழியங்கள் வளர்ச்சியடையவும் அதிகதிகமாய் ஜெபிப்போம். ஜெபமே ஜெயம். ஜெயமோ கர்த்தரால் வரும்.

உங்களுக்காக என்றும் ஜெபிக்கும்
**Rev. V. இஸ்ரவேல் தேவதாசன்**



ஆசிரியர்
Rev. V. இஸ்ரவேல் தேவதாசன்
Publisher & Editor

சிறப்பு இலவசப்பிரதி

அடிச்சிட்டோர்
அன்பு அச்சகம்

**நோக்கம்**
பாவம் செய்து நரகத்திற்கு போகும் ஜனங்களைத் தடுத்து தேவ ராஜ்யத்திற்கு செல்ல அவர்களை ஆயத்தம் செய்வது

**முகவரி**
**ஆத்ம நேசர் ஜெப ஐக்கியம்**
எண் 2 -106, அகரம் மெயின் ரோடு,
அகரம் தென், சேலையூர்,
சென்னை - 600 073.
**தொடர்புக்கு**
044 - 2229 4058 / 2689
94440 30053 / 94440 30503



தேவ செய்தி

# தம் ஜனம்

**கர்த்தர் தமது ஜனத்திற்குப் பெலன் கொடுப்பார்
கர்த்தர் தமது ஜனத்திற்குச் சமாதானம் அருளி
அவர்களை ஆசீர்வதிப்பார். சங் 29:11**

கர்த்தருக்குள் பிரியமானவர்களே! கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன். தேவன் எவரை முன்குறித்தாரோ அவரை அழைத்து, அழைத்தவரை தெரிந்து கொள்ளுகிறார். தெரிந்து கொண்டவர்களைப் பார்த்து என் ஜனம் என்று அழைக்கிறார். 'என்' என்ற வார்த்தைக்கு ஒரு சிறப்பு அம்சம் உண்டு. அதாவது வேறு யாருக்கும் சொந்தமல்ல. எனக்கு மட்டும்தான் சொந்தம் என்பது இதன் பொருளாகும். சிலர் தங்களுடைய நாடு, மொழி, மதம், குடும்பம், குலம், கோத்திரம் இவைகளைப் பற்றி பெருமையாகப் பேசி உரிமை பாராட்டுவார்கள். ஆனால், தேவனோ தன் சத்தத்துக்குக் கீழ்ப்படிந்து, பாவமன்னிப்பின் நிச்சயத்தை அடைந்து, அவருடைய சத்தத்துக்குக் கீழ்ப்படிகிறவர்களைப் பார்த்து என் ஜனம் அதாவது தம் ஜனம் என்று அழைக்கிறார். அப்படி அழைப்பவரே நம் தேவனாகிய கர்த்தர்.

## கர்த்தர் யார்?

வானத்தையும் பூமியையும் தம்முடைய வல்லமையினால் உண்டாக்கி, பூச்சக்கரத்தைத் தம்முடைய ஞானத்தினால் படைத்து, வானத்தைத் தம்முடைய அறிவினால் விரித்த கர்த்தரே மெய்யான தெய்வம். கர்த்தரே ஆவியானவர். தேவ ஆவியானவர் ஜலத்தின் மேல் அசைவாடியது மட்டுமல்லாமல் நமக்குள்ளே வாசம் பண்ணி, உலாவி நம்முடைய தேவனாயிருக்கிறார். அவர் நமக்குள்ளே உலாவி வரும் போது நாம் அவருடைய ஜனங்களாக மாறுவதோடு மட்டுமல்லாமல், ஜீவனுள்ள தேவனுடைய ஆலயமாகவும் காணப்படுகிறோம். அவர் சர்வ வல்லவர், சமாதானப் பிரபு, ஆலோசனைக் கர்த்தர், அதிசயமானவர், ஒருவரும் சேரக் கூடாத ஒளியினிலே வாசம் பண்ணுகிறவர், பாவமில்லாதவர், பரிசுத்தர், நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர், இஸ்ரவேலின் துதிகளுக்குள் வாசம் பண்ணுகிறவர் என்றெல்லாம் அழைக்கப்படுகிறார்.

## உள்ளே


1 • தேவசெய்தி
7 • சபை ஆராதனை ஒழுங்குகள்
8 • சாட்சிகள்
12 • தியாகச் செம்மல்
16 • எசேக்கியா
17 • The Power of Blessing
21 • ஹாய் குட்டிஸ்
22 • வேத வாசிப்பு பகுதி
23 • யூத் ஸ்பெஷல்
26 • மருத்துவம்
27 • Blessings in the path of Righteousness
32 • சமையல்

## கர்த்தரின் விருப்பமும் செயலும்:-

தாழ்மையுள்ளவர்களுக்குக் கர்த்தர் கிருபை அளிக்கிறார். பெருமையுள்ளவர்களுக்குக் கர்த்தர் எதிர்த்து நிற்கிறார் என்ற வசனத்தின் படி தம்முடைய ஜனங்கள் தங்களைத் தாழ்த்த வேண்டும் என்பதை 2நாளா 7:14-ல் குறிப்பிட்டுள்ளார். என் நாமம் தரிக்கப்பட்ட என் ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி, ஜெபம் பண்ணி, என் முகத்தைத் தேடி, தங்கள் பொல்லாத வழிகளை விட்டுத் திரும்பினால், அப்பொழுது பரலோகத்திலிருக்கிற நான் கேட்டு, அவர்கள் பாவத்தை மன்னித்து, அவர்கள் தேசத்துக்கு சேஷமத்தைக் கொடுப்பேன் என்றார். இதனால் பாதுகாப்பும் செழிப்பும் பெற வேண்டுமானால் மேற்கண்ட வசனத்தின் படி செய்ய வேண்டும் என்பதை அறியலாம். மேலும் 'இயேசு' என்பதன் பொருள் தம் இரத்தத்தால் ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார் என்பதை மத் 1:21, எபி 2:17, எபி 13:12 ஆகிய வசனங்கள் மூலமாகவும் அறிந்து கொள்ளலாம்.

அந்நியர்களும் பரதேசிகளுமாயிருந்த நம்மை, தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்துக்கு வரவழைத்த தேவனுடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்து கொள்ளப்பட்ட ஜனமாக நாம் காணப்படுகிறோம். கர்த்தரால் இரட்சிக்கப்பட்ட என் மகனே, மகளே உனக்கு ஒப்பானவன் யார்? அவரே உனக்குச் சகாயம் செய்யும் கேடகமும் உனக்கு மகிமை பொருந்திய பட்டயமுமாக காணப்படுகிறார். உன் சத்துருக்கள் இச்சகம் பேசி அடங்குவார்கள். நீ ஏன் கலங்க வேண்டும்? திகையாதே கலங்காதே அவர் உன்னோடு இருக்கிறார். அவரால் தெரிந்து கொள்ளப்பட்ட ஜனமே! உன் தாகத்தைத் தீர்த்த தேவனின் மகத்துவத்தைப் பிறருக்குக் கூறுகின்றாயா? அவரைத் துதிக்கின்றாயா? அல்லது இஸ்ரவேல் ஜனங்களைப் போல் நன்மையை மறந்து தேவனைத் தூஷிக்கின்றாயா? என் ஜனம் என்னைத் துதித்து என் உதவியை மறக்கக் கூடாது என்பதே அவருடைய விருப்பம்.

என் ஜனங்கள் இரண்டு தீமைகளைச் செய்தார்கள். ஜீவத்தண்ணீர் ஊற்றாகிய என்னை விட்டு விட்டார்கள். தண்ணீர் நிற்காத தொட்டிகளாகிய வெடிப்புள்ள தொட்டிகளைத் தங்களுக்கு வெட்டிக் கொண்டார்கள். என் ஜனங்களோ என்னை மறந்து, மாயையான விக்கிரகங்களுக்குத் தூபம் காட்டுகிறார்கள் என்று எரே 2:13, 18:15 ஆகிய வசனங்களின் மூலம் தேவனின் மன வருத்தத்தை அறிந்து கொள்ளலாம். எனக்கு அன்பான சகோதரனே சகோதரியே உன் நிலைமை என்ன? உனக்கும் தேவனுக்கும் இடையே உள்ள உறவு எப்படி இருக்கிறது? உன் செயல் தேவனுக்கு மனமகிழ்ச்சியைக் கொடுக்கிறதா? அல்லது மன துக்கத்தை கொடுக்கிறதா? இல்லையென்றால், தேவ பெலத்தோடு உன்னை சரி செய்து கொள். அவர் உங்களுக்குக் கற்பிக்கிறபடியே எல்லாக் காரியங்களையும் செய்யுங்கள். அப்பொழுது நீங்கள் தேவனின் ஜனமாயிருப்பீர்கள்; அவர் உங்கள் தேவனாயிருப்பார்.

## பெலன் கொடுக்கிறார்

இதை வாசிக்கும் அன்புப் பிள்ளையே! பெலன் இல்லாமல் சோர்வுடன் காணப்படுகிறாயோ? இந்த உலக வாழ்க்கையில் பலவித துன்பங்களால் அலைபட்டு, நோயுற்று, வறுமையுற்று, உடல் பெலன் குன்றி காணப்படுகிறாயா? சுவர் இருந்தால்தானே சித்திரம் வரைய முடியும். சரீரம் பெலமுள்ளதாக இருந்தால்தான் உலகப்பிரகாரமான வாழ்க்கை இன்பமாக அமையும். மனமகிழ்ச்சிதான் முகமலர்ச்சியைத் தரும். அந்த மலர்ச்சிதான் உன் ஆவிக்குரிய வாழ்க்கைக்கும் உதவியாக இருக்கும். இத்தகைய பெலனைப் பெற்றுக் கொள்வது எப்படி? கர்த்தர் தம் ஜனத்துக்குப் பெலன் கொடுக்கிறார் என்று சங் 29:11 கூறுகிறது.

பணம் இல்லாதவன் பிணம். பணமே மனிதனுடைய மகிழ்ச்சிக்குக் காரணம் என்று உலக மக்கள் கூறுவதுண்டு, ஆனால், சத்திய வேதமோ அதைக் குறித்துப் பேசும் போதோ பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேரானது என்று கூறுவதோடு **கர்த்தருக்குள் மகிழ்ச்சி யாயிருப்பதே உங்களுடைய பெலன்** என்று நெகேமியா 8:10ல் கூறுகிறது. மீதியானியராலே இஸ்ரவேலர் மிகவும் சிறுமைப்பட்டார்கள். அவர்களைப் பார்த்து கிதியோன் பயந்த போது கர்த்தர் அவனைப் பார்த்து உனக்கு இருக்கிற இந்தப் பலத்தோடே போ: உன்னை அனுப்புகிறவர் நான் அல்லவா என்றார். அந்த வார்த்தையை நம்பிச் சென்ற போது ஜெயமும் பெற்றான். இந்தச் செயலால் **என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ் செய்ய எனக்குப் பெலனுண்டு** என்ற பவுலின் வசனம் நமக்கு நினைவுக்கு வருகிறதல்லவா?(பிலி 4:13) தேவ பிள்ளையே **பயப்படாதே; திகையாதே; கலங்காதே.**

கர்த்தர் மேல் உன் பாரத்தை வைத்து விட்டு உனக்கு இருக்கிற கொஞ்ச பெலத்தோடே போ. அவரே உனக்காக யுத்தம் செய்து காரியத்தை ஜெயமாக முடித்து கொடுப்பார். சங்கீதக்காரனாகிய தாவீது தன் சொந்த பெலனில் சார்ந்து நில்லாமல், எப்போதும் தேவனையே சார்ந்து இருப்பதைக் காணலாம். இதனை, தான் எழுதிய சங்கீதங்களில் என் பெலனாகிய கர்த்தாவே, என் பெலனே எனக்குச் சகாயம் பண்ணும், கர்த்தர் என் பெலனும் கேடகமுமாயிருக்கிறார், தேவன் நமக்கு அடைக்கலமும் பெலனுமானவர், என் பெலனே உம்மைக் கீர்த்தனம் பண்ணுவேன், என் ஆத்துமாவிலே பெலன் தந்தவரே என்று குறிப்பிட்டிருப்பதால் தாவீது கர்த்தரின் பெலத்தில் சார்ந்து இருந்தார் என்பதை அறியலாம். என் அன்பு மகனே நீ யாருடைய பெலத்தில் சார்ந்து இருக்கிறாய்? பெற்றோரின் பெலத்திலா? பணத்தின் பெலத்திலா? அல்லது நண்பனின் பெலத்திலா? கர்த்தரையே சார்ந்து கொள்.

கர்த்தரின் பெலனில் சார்ந்து கொள்ள வேண்டும் என்பது உண்மைதான். கர்த்தரின் பெலனை எவ்வாறு பெற்றுக் கொள்ள முடியும் என்று பார்க்கலாம். கர்த்தரின் நாமம் பலத்த துருகம்; நீதிமான் அதற்குள் ஓடிச் சுகமாயிருப்பான். (நீதி 18:10) தாவீது கோலியாத்தைக் கொன்றது நாமறிந்த ஒன்று. தாவீது யாருடைய நாமத்தில் சென்றான்? இஸ்ரவேலுடைய இராணுவங்களின் தேவனாகிய சேனைகளுடைய கர்த்தரின் நாமத்தில் சென்றான். நாமும் கர்த்தரின் நாமத்தை உச்சரித்து, யெகோவா தேவனின் நாமங்களைச் சொல்லித் துதிக்கும் போது பெலனைப் பெற்றுக் கொள்ளலாம்.

இயேசு பிசாசினால் சோதிக்கப்படுவதற்கு ஆவியானவராலே வனாந்திரத்திற்குக் கொண்டு போகப் பட்டார். பிசாசு இயேசுவைப் பார்த்து நீர் தேவனுடைய குமாரனேயானால் இந்தக் கல்லுகள் அப்பங்களாகும்படி சொல்லும் என்றான். இயேசு மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்றார். நாம் நமக்கு வருகிற பெலவீனங்களிலும் சோதனைகளிலும் ஜெயம்பெற, அந்தந்த இடத்துக்கு ஏற்ற வசனங்களைப் பயன்படுத்த தெரிந்திருக்க வேண்டும். அப்படித் தெரிந்திருந்தால்தான் வசனத்தைப் பயன்படுத்தி பெலனடைய முடியும்.

கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்கள் புதுப் பெலன் அடைந்து கழுகுகளைப் போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள். (ஏசா 40:31) கழுகு வயது முதிர்ந்த நேரத்தில், செட்டைகள் தளர்ந்த நேரத்தில் மலையின் உச்சியில் சென்று அமர்ந்து கொள்ளுமாம். தன் அலகால் பழைய இறக்கைகளைப் பிடுங்கி எறிந்து விடும். புதிய இறக்கை முளைத்த பின்பு புதுப் பெலத்தோடு செட்டைகளை அடித்துப் பறக்கும். அதைப் போல நாமும் கர்த்தருடைய வார்த்தைக்கு, நேரத்துக்குக் காத்திருந்தால் பெலனைப் பெற்றுக் கொள்ளலாம்.

உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது என்ற வாக்கு உண்மையானது. நம்முடைய விசுவாசமே உலகை ஜெயிக்கிற ஜெயம். கிதியோன், பாராக், சிம்சோன், யெப்தா, தாவீது, சாமுவேல் என்பவர்கள் விசுவாசத்தினாலே ராஜ்யங்களைச் ஜெயித்தார்கள். நீதியை நடப்பித்தார்கள். வாக்குத்தத்தங்களைப் பெற்றார்கள். சிங்கங்களின் வாய்களை அடைத்தார்கள். பலவீனத்தில் பலன் கொண்டார்கள். மேலும், ஆவியிலே அனலாயிருந்தார்கள். ஆகையால் தேவநாமம், வசனம், கிருபை, விசுவாசம், ஆவியின் பெலன் போன்றவற்றைக் காத்து நடந்தால் நாம் தேவ பெலனைப் பெற்றுக் கொள்ளலாம்.

## சமாதானம் கொடுக்கிறார்:-

நம்முடைய தேவன் கலகத்துக்குத் தேவனாயிராமல் சமாதானத்துக்குத் தேவனாயிருக்கிறார். கர்த்தர் தமது ஜனத்திற்கு, தம்மால் தெரிந்து கொண்ட பிள்ளைகளுக்குச் சமாதானம் கொடுக்கிறவராகக் காணப்படுகிறார். அவருடைய நாமம் சமாதானப் பிரபு அல்லவா? உலகம் கொடுக்கிற பிரகாரமாக அல்ல. உலகம் கொடுக்கக் கூடாததும், உலகத்தால் எடுக்கக் கூடாததுமான சமாதானத்தை தம்முடைய பிள்ளைகளுக்குத் தருகிறார். எல்லாவற்றுக்கும் ஒரு முடிவு உண்டு. ஆனால், அவருடைய சமாதானத்துக்கு ஒரு முடிவில்லை. பூட்டப்பட்ட வீட்டுக்குள் சீஷர்கள் கூடியிருந்த போது, இயேசு வந்து நடுவே நின்று உங்களுக்குச் சமாதானம் என்றார். அன்புப் பிள்ளையே! உன் இதயத்தைப் பூட்டி வைத்திருந்தாலும் அவர் உள்ளே வந்து உன்னுடனே வாசம் பண்ண விரும்புகிறார். நீ உன் இதயக் கதவுகளைத் திறந்தாயானால் சமாதானத்தையும் சந்தோஷத்தையும் கொடுப்பார்.

பரிசுத்தம் இல்லாமல் ஒருவனும் தேவனைத் தரிசிக்க முடியாது. பரிசுத்த அலங்காரத்தோடே நாம் கர்த்தரைத் தொழுது கொள்ள வேண்டும். பரிசுத்தமாய் வாழும் தம்முடைய பரிசுத்தவான்களுக்குச் சமாதானத்தைக் கொடுப்பதால், அவர்கள் மதிகேட்டுக்குத் திரும்பாமல் தப்பித்துக் கொள்வார்கள் என்று சங் 85:8ல் சங்கீதக்காரன் கூறுவதைப் பார்க்கலாம். மேலும், இரவும் பகலும் அவருடைய வேதத்தில் பிரியமாய் இருக்கிற மனுஷன் பாக்கியவானாய் இருப்பான், அந்த சத்திய வேதத்தை, களங்கமில்லா ஞானப்பாலை, பாதைக்குத் தீபமும் கால்களுக்கு வெளிச்சமுமாய் இருக்கும் தேவ வார்த்தையை நேசித்து வாசிக்கிறவர்களுக்கு மிகுந்த சமாதானமுண்டு. அவர்கள் தங்கள் வாழ்க்கையில் இடறல் அடைவதில்லை.

நாம் பெலனில்லாமல் திடனற்று சோர்ந்து காணப்படுகிற வேளையில், தேவன் தம்முடைய தூதனை அனுப்பி நம்மைத் திடப்படுத்துகிறவராயிருக்கிறார். தானியேல் தேவ ஆவியைப் பெற்றவனாய் இருந்தான் அதனால், சொப்பனத்தின் பொருளைச் சொல்லும் வரமும் அவனுக்குள் இருந்தது. ஒரு முறை தானியேலுக்கு ஒரு காரியம் வெளியாக்கப்பட்டது. அந்தக் காரியத்தை அவன் கவனித்து, தரிசனத்தின் பொருளை அறிந்து கொண்டான். அதினிமித்தமாக தானியேல் மிகவும் நடுங்கி, பெலனெல்லாம் ஒடுங்கி, உருவம் வாடி, திடனற்றுக் காணப்பட்டான். அப்பொழுது மனுஷ ரூபமான ஒருவன் தானியேலைத் தொட்டு திடப்படுத்தி **பிரியமான புருஷனே, பயப்படாதே, உனக்குச் சமாதானமுண்டாவதாக. திடன்கொள், திடன்கொள்** (தானி 10:19) என்றான். இப்படி அவன் பேசுகையில் தானியேல் திடன் கொண்டான். அன்புப் பிள்ளையே! நீயும் தானியேல் போல், நீ கண்ட சொப்பனத்தை நினைத்து கலங்கிக் கொண்டிருக்கிறாயோ? தானியேலைத் திடப்படுத்திய தேவன் உன்னையும் திடப்படுத்துவார். அப்போது உன் சமாதானம் ஒரு நதியைப் போலவும், ஜாதிகளின் மகிமையைப் புரண்டு ஓடுகிற ஆற்றைப் போலவும் பாயும்படியாகச் செய்வார்.

சமாதானத்துக்காகக் காத்திருக்கும் என் அன்பு சகோதரியே! சமாதானத்துக்குக் காத்திருந்தோம் பிரயோஜனமில்லை; ஆரோக்கியக் காலத்துக்குக் காத்திருந்தோம், இதோ ஆபத்து (எரேமியா 8:15) என்றும், சமாதானம் இல்லாதிருந்தும் சமாதானம், சமாதானம் என்று சொல்லி மேற்பூச்சாய் பேசுகிறவர்களின் மத்தியில் வாழ்கிறேன் என்றும் சொல்லிக் கொண்டிருக்கும் மகளே, ஒரு காரியத்தை மட்டும் செய்ய நீ மறந்து விடாதே. உன்னுடைய வழி கர்த்தருக்குப் பிரியமாயிருந்தால் சத்துருக்களும் சிநேகிதராவார்கள். சமாதானம் செய்து கொள்வார்கள் நீதியின் கிரியை சமாதானமும் நீதியின் பலன் என்றுமுள்ள அமரிக்கையும் சுகமுமாம் (ஏசா 32:17) என்ற வசனத்தின்படி நீதியின் சூரியனாம் இயேசுவைப் பின்பற்றி அவருடைய வசனங்களுக்குக் கீழ்ப்படிந்து உன்னதத்திலிருந்து நம்மேல் ஊற்றப்படும் பரிசுத்த ஆவியால் நிறைந்து வாழுங்கள். தேவ சமாதானம் உங்களை சூழ்ந்து கொள்ளும்.

## ஆசீர்வதிக்கிறார்:-

நம்முடைய வாழ்க்கையில் நாம் எல்லோரும் விரும்புவதும் எதிர்பார்ப்பதும் ஆசீர்வாதம். இதை விரும்பாதவர் யாருமே இல்லை. என்னதான் வசதியாக, செழிப்பாக இருந்தாலும் மனிதனின் மனம் திருப்தி அடைவதில்லை, இன்னும், இன்னும் என்றுதான் அலைந்து கொண்டிருக்கிறோம். இந்தத் திருப்தியையும் ஆசீர்வாதத்தையும் கொடுப்பவர் நம் தேவனாகிய கர்த்தர் மட்டுமே. போதும் என்ற மனதுடனே கூடிய தேவ பக்தியே ஆதாயம் என்று வேத வசனம் கூறுகிறது. இஸ்ரவேலை ஆசீர்வதிப்பதே கர்த்தருக்குப் பிரியம். கர்த்தரின் ஆசீர்வாதமே ஐசுவரியத்தைத் தரும். அதனோடு அவர் வேதனையைக் கூட்ட மாட்டார். நீதிமான்களின் சிரசின் மேல் ஆசீர்வாதம் தங்கும்.

கர்த்தர் தம்முடைய பிள்ளைகள் வறுமையில் இருப்பதை ஒருபோதும் விரும்புவதில்லை. ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்த போது எல்லாவற்றையும் பார்த்து நன்று என்று கண்டார். மட்டுமல்ல, அனைத்தையும் பலுகிப் பெருகக் கட்டளை கொடுத்தார். எதுவும் குறைவுபடக் கூடாது என்பதே தேவனின் எண்ணம். விசுவாசத்தின் தகப்பனாகிய ஆபிரகாமைப் பார்த்து, **“நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்; நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்” என்றார். (ஆதி 12:2)**

கர்த்தர் நம்மை ஆசீர்வதிப்பது உண்மை தான். என்றாலும் அந்த ஆசீர்வதங்களைப் பெற்றுக் கொள்ள சில நிபந்தனைகளையும் கொடுத்துள்ளார். ஆதாம், ஏவாளுக்கு ஒரு குறிப்பிட்ட மரத்தின் பழத்தைச் சாப்பிடக் கூடாது என்றதைப் போல் நாம் விலக்க வேண்டிய சில காரியங்களையும் குறிப்பிட்டுள்ளார். என் நுகம் மெதுவாகவும் இலகுவாகவும் இருக்கும் என்று சொன்ன கர்த்தர், அவருடைய கற்பனைகளை மட்டும் கவனமாய் கடைப்பிடிக்கச் சொல்லுகிறார் அப்படிச் செய்யும் போது, நம்மை மேன்மேலும் ஆசீர்வதிப்பார். கடன் வாங்காமல், கடன் கொடுக்கும்படியாகச் செய்வார். ஏற்ற காலத்தில் நமக்குத் தேவையான ஆசீர்வாதங்களைக் கொடுத்து நம்மைப் பெருகச் செய்வார். வாலாக்காமல் தலையாக்குவார். கீழாக்காமல் மேலாக்குவார்.

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் அல்லவா? மடி நிறைய பணம் இருந்தாலும் நோய் வந்து விட்டால் நம்முடைய மகிழ்ச்சியே போய் விடும். நாம் கர்த்தரைத் தேடி அவருக்குக் கீழ்ப்படிந்தால், **எகிப்தியருக்கு வரப்பண்ணின வியாதிகளில் ஒன்றையும் உனக்கு வரப்பண்ணேன்; நானே உன் பரிகாரியாகிய கர்த்தர்** என்று யாத் 15:26ல் கூறியுள்ளார்.

நோய் இல்லாமல் இருப்பதால் திருப்தியாகச் சாப்பிடக்கூடிய பெலனைக் கொடுப்பார். கர்த்தரையும் அவர் வல்லமையையும் நாடி, அவர் சமுகத்தை நித்தமும் தேட வேண்டும். அவரைத் தேடும் போது, உன் வியாபாரம் செழிக்கும். அது கர்த்தருக்குப் பரிசுத்தமாக்கப்படும். நீ உன் வாழ்க்கையில் திருப்தியோடு காணப்படுவாய்.

கொடுங்கள் அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும். இறைக்கிற கிணறுதான் ஊறும். நீ தேவனுக்கு கொடுப்பதில் குறைவுபடக் கூடாது. தேவனுடைய ஊழியத்துக்காகக் கொடுக்க முன் வரவேண்டும். மக்கெதோனியா நாட்டுச் சபைகளுக்குத் தேவன் அளித்த கிருபையைப் பற்றிக் கூறும் போது, அவர்கள் மிகுந்த உபத்திரவத்தினாலே சோதிக்கப்படுகையில், கொடிய தரித்திரமுடையவர்களாயிருந்தும், தங்கள் பரிபூரண சந்தோஷத்தினாலே மிகுந்த உதாரத்துவமாய்க் கொடுத்தார்கள். (2கொரி 8:2). தங்கள் திராணிக்குத் தக்கதாகவும், திராணிக்கு மிஞ்சியும் கொடுத்தார்கள். மேலும், கர்த்தர் தன்னைச் சோதிக்கும்படியாக மல்3:10ல் கூறியுள்ளார். **தசமபாகங்களைத் தேவனின் பண்டக சாலைக்குக் கொண்டு வரும் போது வானத்தின் பலகணிகளைத் திறந்து இடங்கொள்ளாமல் போகும் மட்டும் நம்மை ஆசீர்வதிப்பார். அமுக்கிக் குலுக்கிக் கொடுப்பார்.** 5 அப்பம் 2 மீனைக் கொடுத்த சிறுவனைப் போலக் கொடுங்கள். உங்கள் ஐசுவரியத்தைப் பலமடங்காகப் பெருகப் பண்ணி ஆசீர்வதிப்பார். கர்த்தர் தமது ஜனத்திற்குப் பெலனும் அரணான கோட்டையுமாக இருந்து சமாதானம் அருளி, தமது ஜனத்தை ஆசீர்வதிப்பார் என்ற உண்மையை மறந்து விட வேண்டாம்.

**சமாதானத்தை உங்களுக்கு வைத்துப் போகிறேன். என்னுடைய சமாதானத்தையே உங்களுக்கு கொடுக்கிறேன் உலகம் கொடுக்கிற பிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக (யோவான் 14:27)**

கர்த்தருக்குள் பிரியமான என் அன்பு பிள்ளைகளே!

**சமாதானத்தின் தேவன் தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக. (1தெச 5:23).**

கிறிஸ்துவுக்குள் அன்பான
Rev.V.இஸ்ரவேல் தேவதாசன்



# சபையின் ஆராதனை ஒழுங்குகள் - ஆகஸ்டு 2018

| நாள் | கிழமை | ஜெபங்களும் நேரங்களும் |
|---|---|---|
| 1 | புதன் | **உபவாச மற்றும் ஆலோசனை ஜெபம்** - காலை 10.00 முதல் 1.00 மணி வரை (சபையில்) |
| 2 | வியாழன் | **ஆலோசனை ஜெபம்** - காலை 10.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை (சபையில்) |
| 3 | வெள்ளி | **மாலை ஆராதனை** - மாலை 06.30 மணி முதல் இரவு 8.00 மணி வரை (சபையில்) |
| 4 | சனி | **பெரம்பூர் ஊழியம்** - காலை 10.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை<br>No:15,பேப்பர் மில்ஸ் ரோடு, S R P காலனி, சென்னை - 600082. Ph Numb : 9677007731 |
| 5 | ஞாயிறு | **ஓய்வுநாள் ஆராதனை** - காலை 09.30 மணி முதல் மதியம் 12.00 மணி வரை (சபையில்) |
| | | **பெண்கள் ஐக்கியம்** - மதியம் 12.00 மணி முதல் 1.30 மணி வரை (சபையில்) |
| 6 | திங்கள் | **ஆயத்த ஜெபம்** - காலை 11.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை (சபையில்) |
| 7 | செவ்வாய் | **ஆலோசனை ஜெபம்** - காலை 10.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை (சபையில்) |
| 8 | புதன் | **உபவாச மற்றும் ஆலோசனை ஜெபம்** - காலை 10.00 முதல் 1.00 மணி வரை (சபையில்) |
| 9 | வியாழன் | **ஆலோசனை ஜெபம்** - காலை 10.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை (சபையில்) |
| 10 | வெள்ளி | **இரவு ஜெபம்** - இரவு 10.30 மணி முதல் 12.00 மணி வரை (சபையில்) |
| 11 | சனி | **அதிகாலை ஜெபம்** - காலை 05.00 மணி முதல் மதியம் 06.30 மணி வரை (சபையில்) |
| | | ● **அமாவாசை ஜெபம்** - காலை 10.00 மணி முதல் மதியம் 1.30 மணி வரை (சபையில்) |
| 12 | ஞாயிறு | **ஓய்வுநாள் ஆராதனை** - காலை 09.30 மணி முதல் மதியம் 12.00 மணி வரை (சபையில்) |
| | | **வாலிபர் கூட்டம்** - காலை 11.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை (சபையில்) |
| 14 | செவ்வாய் | **ஆலோசனை ஜெபம்** - காலை 10.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை (சபையில்) |
| 15 | புதன் | **உபவாச மற்றும் ஆலோசனை ஜெபம்** - காலை 10.00 முதல் 1.00 மணி வரை (சபையில்) |
| 16 | வியாழன் | **ஆலோசனை ஜெபம்** - காலை 10.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை (சபையில்) |
| 17 | வெள்ளி | **உபவாச ஜெபம்** - காலை 10.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை (சபையில்) |
| 18 | சனி | **உபவாச ஜெபம்** - காலை 10.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை (சபையில்) |
| 19 | ஞாயிறு | **உபவாச ஜெபம் / ஓய்வுநாள் ஆராதனை / ஞானஸ்நானம் / இராபோஜனம்**<br>- காலை 09.30 மணி முதல் மதியம் 12.00 மணி வரை (சபையில்) |
| 20 | திங்கள் | **ஆயத்த ஜெபம்** - காலை 11.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை (சபையில்) |
| 21 | செவ்வாய் | **ஆலோசனை ஜெபம்** - காலை 10.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை (சபையில்) |
| 22 | புதன் | **உபவாச மற்றும் ஆலோசனை ஜெபம்** - காலை 10.00 முதல் 1.00 மணி வரை (சபையில்) |
| 23 | வியாழன் | **ஆலோசனை ஜெபம்** - காலை 10.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை (சபையில்) |
| 24 | வெள்ளி | **மாலை ஆராதனை** - மாலை 06.30 மணி முதல் இரவு 8.00 மணி வரை (சபையில்) |
| 25 | சனி | **கிராம ஊழியம்** - காலை 10.00 மணி முதல் 1.00 மணி வரை |
| 24&25 | வெள்ளி & சனி | **திருச்செந்தூரில் உபவாச ஜெபம்** - காலை 10.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை<br>அப்போலோ கம்ப்யூட்டர் சென்டர், ஆதித்தனார் காலேஜ் எதிரில், வீரபாண்டிய பட்டிணம் ரோடு, திருச்செந்தூர். (Ph : 8903724440,`94445224760) |
| 26 | ஞாயிறு | ○ **பௌர்ணமி ஜெபம்** - காலை 10.00 மணி முதல் மதியம் 1.30 மணி வரை (சபையில்) |
| | | **இரவு ஜெபம்** - இரவு 10.30 மணி முதல் 12.00 மணி வரை (சபையில்) |
| 28 | செவ்வாய் | **ஆலோசனை ஜெபம்** - காலை 10.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை (சபையில்) |
| 29 | புதன் | **உபவாச மற்றும் ஆலோசனை ஜெபம்** - காலை 10.00 முதல் 1.00 மணி வரை (சபையில்) |
| 30 | வியாழன் | **ஆலோசனை ஜெபம்** - காலை 10.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை (சபையில்) |
| 31 | வெள்ளி | **மாதத்தின் கடைசி நாள் இரவு ஜெபம்**-இரவு 10.30 மணி முதல் 12.00 மணி வரை(சபையில்) |



# சாட்சிகள்

**தேவன் உங்களுக்குச் செய்த அற்புதங்களை சாட்சியாக எங்களுக்கு எழுதி அனுப்புங்கள்... அது அநேகருக்கு பிரயோஜனமாயிருக்கும்... ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பார்...**

## கண்களின் கட்டுகளில் இருந்து விடுதலை

**சகோதரி. சுகந்தி, தாம்பரம்**



மார்ச் 22 கண்களில் ஆப்ரேஷன் நடந்தது ஐயா எனக்காக ஜெபிக்கும்போது கண்களில் கட்டுகளிலிருந்து விடுதலை என்று ஜெபித்தார்கள். எனக்கு மிகவும் பயமாக இருந்தது ஏனென்றால், என் தகப்பனாருக்கு கண்களில் பிரச்சனை இருந்தது. என் கணவர் ரெயில்வேலில் வேலை செய்யும் போது கண்களில் பிரச்சனை இருந்து அதனால் வேலையை விட்டுவிட்டார். ஐயா என்னுடைய பயத்தை நீக்கி ஆப்ரேஷனுக்காக ஜெபித்தார்கள். என் கண் ஆப்ரேஷன் நல்லபடியாக முடிந்தது. கண்களில் வலி இருந்தது ஐயா ஜெபித்தார்கள். கர்த்தர் சுகத்தை கொடுத்தார். கர்த்தருடைய நாமத்திற்கு ஸ்தோத்திரம். ஜெபித்த ஐயாவுக்கு நன்றி.

## அற்புதத்தின் தேவன்

**சகோ. டேவிட் ரவிசங்கர், தேனி மாவட்டம் கம்பம்**



ஒருவர் என்னை இங்கு கூட்டிக்கொண்டு வந்தார். ஐயா எனக்காக ஜெபித்தார்கள். அன்றிலிருந்து என் வாழ்க்கையில் மரண கட்டிலிருந்து விடுதலை உண்டாயிற்று. என்னுடைய மூத்த மகள் B.E Exam எழுதும் போதும் ஐயாவிடம் வந்து ஜெபித்துவிட்டு போவாள். கல்லூரியில் முதல் மாணவியாக வர கர்த்தர் கிருபை செய்தார். 2வது மகள் 10வது தேர்வு எழுதினாள் ஒவ்வொரு Exam க்கும் எழுதும் முன்பு ஐயாவிடம் ஜெபித்துக் கொள்வாள் 484 மார்க் எடுக்க கர்த்தர் கிருபை செய்தார். கர்த்தருக்கு நன்றி. ஜெபித்த ஐயாவுக்கு நன்றி.

# போராட்டத்திலிருந்து விடுதலை

**சகோ. மாரிமுத்து, ரெட்டில்ஸ்**

நான் மிகவும் போராட்டத்தோடு வந்தேன், என் போராட்டத்தை கர்த்தர் மாற்றிப்போட்டார். இங்கு பௌர்ணமி ஜெபத்திற்கு வரும் போது யாரோ கன்னத்தில் என்னை அடித்தது போல இருந்தது ஒரே வலியாய் இருந்தது ஐயா ஜெபித்தார்கள் சுகம் கிடைத்தது. ஜெபிக்க முடியாத தடையை நீக்கினார். மாதத்தில் பல நாட்கள் வயிறுவலி, பேதி வேதனையோடு இருந்தேன். ஐயா ஜெபித்தார்கள் கர்த்தர் விடுதலைக் கொடுத்தார், இப்பொது நான் ஜெபிக்கிறேன், வேதம் வாசிக்கிறேன் ஜெபித்த ஐயாவுக்கு நன்றி விடுதலை கொடுத்த தேவனுக்கு ஸ்தோத்திரம்.

# அதிசயங்களை காணச் செய்த தேவன்

**சகோதரி. மீனா, பெரம்பூர்**

பிப்ரவரி மாதம் என் கணவருக்கு விபத்து நடந்தது இடுப்பில் அடிப்பட்டதால் டாக்டர்கள் ஆப்ரேஷன் கூட செய்யமுடியாத அளவுக்கு இடுப்பில் எலும்புகள் உடைந்து விட்டது. அடிப்பட்ட எலும்புகள் முற்றிலும் உடைந்து விட்டதால் எங்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை. டிரைவர் வேலை செய்வதால் எங்களுக்கு வருமானம் இல்லாத சூழ் நிலை இருந்தது. மருத்துவரும் கைவிட்டனர். உடனே நான் ஐயாவிடம் வந்து ஜெபித்தேன் ஐயா மருத்துவர் இயேசப்பாவை விட பெரியவங்க இல்ல என்று சொன்னார்கள். இயேசப்பா அற்புதம் செய்வார் தைரியமா இரு என்றார்கள். "என்ன ஆச்சிரியம்" "என்னை சுற்றியுள்ள அனைவருக்கும் இது ஆச்சிரியமாயிருந்தது. இரண்டே மாதத்தில் அவர் வேலைக்கு சென்றுவிட்டார். எல்லாருடைய கண்களுக்கு முன்பாக கர்த்தர் கிருபை செய்தார். எந்த ஒரு ஆப்ரேஷன் இல்லாமல் சிகிச்சை இல்லாமல் கர்த்தர் அற்புதம் செய்தார். மற்றும் எனது மகள் ப்ளஸ் 2 படிக்கிறாள் அவளுக்கு ஸ்போர்ட்ஸ் கோட்டா மூலமாய் பீஸ் கட்ட வாய்ப்பு கிடைத்தது. கட்ட வேண்டிய பீஸ் தொகை அதிகமாயிருந்தது. என் கணவருக்கும் அடிப்பட்டு இருந்ததால் பரீட்சை எழுத முடியாமல் இருந்தது. ஐயாவிடம் வந்து ஜெபித்தோம். ஐயாவின் குடும்பத்தாரும் அநேக ஆலோசனைகளை தந்தார்கள். என் மகளுக்கு படிக்க புத்தங்கள் கூட இல்லாத நிலையில் அங்காங்கே வாங்கி படித்தாள். ஐயாவும் என்னை விசுவாசமாயிரு என்றார்கள். அவர் சொன்னபடியே பரீட்சை எழுதினாள். என் மகள் தேர்வில் 934 மார்க் எடுக்க கர்த்தர் கிருபை செய்தார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம். ஜெபித்த ஐயாவுக்கு நன்றி.

# நோயிலிருந்து விடுதலை தந்த தேவன்

**சகோ. திவ்யா, சேழிங்கநல்லூர்**

12 மாதம் உள்ள என்னுடைய ஆண் பிள்ளைக்கு 5 நாள் தொடர்ந்து 102, 103 டிகிரி ஜுரம் இருந்தது. எவ்வளவு மருந்துகள் கொடுத்தும் சரியாகவில்லை. 3 நாள் கழித்து ஐயாவிடம் ஜெபிக்க வந்தேன். உன்னிடம் உள்ள போராட்டம் குழந்தையை பாதிக்கிறது என்றார். ஐயா ஜெபித்தார்கள். தொடர்ந்து இரவில் 3, 4 மணி நேர விடாமல் அழுதுக்கொண்டிருந்த என் பிள்ளை ஐயாவிடம் வந்த ஜெபித்து விட்டு போன அன்றிலிருந்து என் பிள்ளைக்கு கொஞ்ச கொஞ்சமாக ஜுரம் குறைந்து விட்டது. என்னுடைய மாமனார்க்கு இருதய ஆப்ரேஷன் செய்ய வேண்டும் என்று டிசம்பர் மாதம் சொன்னார்கள். ஐயாவிடம் வந்து ஜெபித்தோம் அவர் உடம்பில் கத்தி படாது என்று ஐயா சொன்னார்கள். ஆனால் என் வீட்டில் யாரும் நம்பாமல் இருந்தார்கள். ஆப்ரேஷன் முன்னாடி ஆஞ்சியோ செய்தார்கள். மருத்துவர்கள் உனக்கு ஆப்ரேஷன் வேண்டாம் என்று சொல்லி உன் உடம்பில் கத்தி படாது என்று சொல்லி ஆப்ரேஷனை நீக்கி விட்டனர். சுகம் தந்த தேவனுக்கு ஸ்தோத்திரம். ஜெபித்த ஐயாவிக்கு நன்றி.

# அற்புதத்தை காணச் செய்த தேவன்

**சகோதரி. தெய்வநாயகி, கும்ணாச்சாவடி**



2016லிருந்து இந்த சபைக்கு வருகிறேன். இந்த சபையில் அநேக அற்புதங்கள் பெற்றுள்ளோம். அதேப் போல் மகனுக்கு பெண் பார்த்து அந்த போட்டோவை ஐயாவிடம் காண்பித்து ஜெபித்தோம். கர்த்தர் கிரியை செய்தார். மற்றும் என் மகளுக்கு மாப்பிள்ளை பார்த்தோம் எவ்வளவோ மாப்பிள்ளை பார்த்தோம் அவர்கள் யாரும் அமையவில்லை. மற்றும் அவர்கள் ஆண்டவருடைய பிள்ளைகளாய் இல்லாமல் இருந்தார்கள். எனது கணவரும் இந்துக்குத் தான் கொடுப்பேன் என்றார். ஐயாவிடம் வந்து ஜெபித்தோம் நீ போ ஆண்டவர் மாப்பிள்ளை தருவார் என்றார்கள். அதேப் போல் நடந்தது கர்த்தர் கிருபையால் அமைந்தது. மற்றும் கல்யாணத்திற்கு பணத்தேவைகள் ஏற்பட்டது. ஐயாவிடம் வந்து ஜெபித்தோம். அம்மாவும் ஜெபித்தார்கள். கர்த்தர் கிருபையாய் எல்லாவற்றையும் நேர்த்தியாக சந்தித்தார். என் மகனுக்கு வேலை இல்லாமல் இருந்தது அதையும் கர்த்தர் வாய்க்க செய்தார். தேவனுக்கு ஸ்தோத்திரம் மற்றும் ஜெபித்த ஐயாவிக்கு நன்றி.

# வெற்றி சிறக்கப்பண்ணின தேவன்

**சகோ. சேகர், மாடம்பாக்கம்**

என் மகள் 10வது பரீட்சை எழுதினாள் 500 மதிப்பெண்களுக்கு 484 மார்க் எடுக்க தேவன் கிருபை செய்தார். தேவனுக்கு நன்றி ஜெபித்த ஐயாவுக்கும் நன்றி. அதுமட்டுமல்ல என்னுடைய தொழிலில் 9 வருடம் ஒன்றுமில்லாமல் இருந்தது. ரொம்ப கண்ணீரோடே ஜெபித்து வந்தேன். ஆண்டவருடைய கிருபையால் இரண்டு வியாபாரம் மூலமாய் சில கடனை அடைக்க செய்தார். அதுமட்டுமல்ல கடந்த டிசம்பர் மாதத்தில் 3நாள் உபவாசம் கூட்டத்தில் கலந்துக் கொண்டு சென்றேன். பல சூழ் நிலை சரியில்லாத ஒரு நிலையிலும் கலந்து கொண்டேன். ஜெபத்தை முடித்து வீட்டிற்கு வந்தேன் ஒருவரிடம் மாதம் 40,000 வட்டி கொடுத்துக்கொண்டு வந்திருந்தேன். கர்த்தருடைய கிருபையால் அவர் 30,000 தந்தால் போதும் சீக்கிரம் கடனை முடித்து விடு என்றார். கர்த்தருடைய நாமத்திற்கு ஸ்தோத்திரம். என் குடும்பத்திற்காக பாரப்பட்டு ஜெபித்த ஐயாவுக்கு நன்றி.

# பிணியாளிகளை சுகமாக்கும் தேவன்

**சகோதரி. சோபியா, வேங்கடமங்களம்**

நான் கால் வலியோடே இங்கு வந்தேன். போன மாதம் பௌர்ணமிக்கு இங்கு வந்தேன். அப்போது உனக்கு நிறைய போராட்டம் இருக்கு காலே எடுக்க வேண்டிய சூழ்நிலை வரும் என்றார்கள். தொடர்ந்து வா என்றார்கள். தொடர்ந்து சென்றேன். என்னால் நிற்க முடியாமல் இருந்தேன். பஸ்ஸிலும் நிற்க முடியாமல் தொடர்ந்து போராட்டத்துடன்



வந்தேன். பௌர்ணமி ஜெபத்தில் சகோதரர் ஜெபித்த போது அபிஷேகத்தினால் பூரண சுகம் உண்டானது மற்றும் என் மகளுக்காகவும் ஐயாவிடம் ஜெபித்தேன். அதுவும் அவள் முற்றிலும் கண் தெரியாத மகள் அவளையும் ப்ளஸ் 2 தேர்வில் 970 மார்க் எடுக்க கர்த்தர் கிருபை செய்தார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம். ஜெபித்த ஐயாவுக்கும் நன்றி.

# விடுதலையின் தேவன்

**முஸ்லிம் சகோ., கொளத்தூர்**

2007 லிருந்து வருகிறேன். என்னிடம் நிறைய கட்டுகள் இருந்தது மற்றும் குடி, சிகரேட் பழக்கத்திலிருந்தும் விடுதலை பெற ஐயாவிடம் ஜெபித்து சென்றேன். உடனே விடுதலை கிடைத்தது. அதன் பிறகு இருதய பிரச்சினை அதற்கும் வந்து ஜெபித்தேன் விடுதலை கிடைத்தது ஒவ்வொரு நாள் பிரச்சனையிலும் கர்த்தர் கிருபையால் விடுதலை கிடைத்தது. கர்த்தருக்கு மகிமை உண்டாவதாக மற்றும் ஜெபித்த ஐயாவிக்கு நன்றி.

# கண்ணீரை கண்ட தேவன்

**சகோதரி. மேரி, சத்தியா நகர்**

என்னுடைய மகனுக்கு 5, 6 வருடம் திருமணம் தடையாக இருந்தது. ஐயாவிடம் வந்து ஜெபித்தப் போது நீ போ கர்த்தர் உனக்கு வாய்க்க செய்வார் என்று சொன்னார்கள். அப்படியாக ஒரு நல்ல பெண்ணை தேவன் கொடுத்து திருமணத்தை நடத்தி தந்தார். இப்போது அவர்களுக்கு 2 மாதம் ஆண் குழந்தையும் இருக்கிறது கர்த்தர் செய்த நன்மைகளுக்காக நன்றி மற்றும் என் கணவர் மரித்துப் போகும் நிலையிலும் அவருக்கு ஜீவனை கொடுத்தார். கர்த்தர் செய்த நன்மைகளுக்காக அவருக்கு கோடி ஸ்தோத்திரம். ஒவ்வொன்றுக்கும் பாரப்பட்டு ஜெபித்த ஐயாவுக்கு நன்றி.

# கர்த்தர் சொன்னபடி செய்தார்

**சகோதரி. கவிதா, பெரம்பூர்**



என் மகன் ப்ளஸ் 2 பரீட்சைக்காக ஜெபிக்க வந்தேன். நிறைய போராட்டத்தோடும் வந்தேன். ஐயா எங்களுக்கு நிறைய போராட்டம் இருக்கு என்று சொன்னார்கள். ஆனாலும் உன் மகன் பாஸ் ஆவான் என்றார்கள். ஆகுமோ ஆகாதோ என்று சென்றேன் அவர் சொன்னபடியே 730 மார்க் எடுத்து பாஸ் பண்ணினான். மற்றும் அவனுடைய மார்க்குக்கு என்ன குரூப் எடுப்பது என்று தெரியாமல் குழம்பிக் கொண்டிருந்தோம். ஐயாவிடம் வந்து ஜெபித்தோம் மற்றும் சகோதரரும் ஆலோசனை சொன்னார்கள். அந்த ஆலோசனை படி நடந்தோம். ஒரு கல்லூாரியில் கேட்டோம் அவர்கள் 52,000 பீஸ் தொகை கட்ட சொன்னார்கள். எங்களால் அந்த பணத்தை கட்ட முடியாமல் வந்து ஐயாவிடம் ஜெபித்தோம். நீ போ பாதியாவது கட்ட சொல்லுவார்கள் என்றார்கள். அவர் சொன்னபடியே ஸ்போர்ட்ஸ் கோட்டா மூலமாய் 28,000 கட்ட கர்த்தர் கிருபை செய்தார். இயேசப்பாவுக்கு நன்றி மற்றும் ஜெபித்த ஐயாவிக்கு நன்றி.

# சுகம் தந்த தேவன்

**சகோ. முரகன், தைலாவரம்**

போன வருடம் எனது சகோதரிக்கு மோஷன் போற இடத்தில் கட்டி என்று ஐயாவிடம் சொல்லி ஜெபித்து சென்றேன். G.Hல் சேர்த்தோம். நாங்களும் தொடர்ந்து வந்து ஐயாவிடம் ஜெபித்துக்கொண்டிருந்தோம். கர்த்தர் கிருபையால் மருத்துவரும் வந்தார்கள் ஆப்ரேஷன் நல்லபடியாக நடந்தது. தேவனுக்கு மகிமை உண்டாவதாக ஜெபித்த ஐயாவுக்கும் நன்றி.

# தியாகச் செம்மல்

## பண்டிதை இராமாபாய் (1858 / 1922)

### பிறப்பும் இளமையும்



தென்னிந்தியாவில் மங்களூர் மாவட்டத்தில் வைதீக பிராமண குடும்பத்தில் பிறந்தவள் இராமாபாய் கடைசி மகளாகப் பிறந்த இவள் ஆறு மாதக் குழந்தையாக இருக்கும் போதே இவளுடைய பெற்றோர்கள் வீட்டை விட்டு வெளியேறி துறவிகளாக மாறி விட்டனர். சிறு கூடையில் வைத்து இவளைச் சுமந்து சென்றனர். புண்ணிய நதிகளில் ஸ்நானம் செய்து, புண்ணிய ஸ்தலங்களைத் தரிசித்து, பொது இடங்களில் உட்கார்ந்து புராணங்களை இவருடைய தந்தை சமஸ்கிருதத்தில் ஓதுவார் அதைக் கேட்கும் பக்தியுள்ள இந்துக்கள் பணமோ ஆகாரமோ அளித்து ஆதரித்தனர். அவளுடைய தந்தை, தான் பலவீனம் அடையும் வரை இத்தொழிலைச் செய்து வந்தார்.

### பஞ்சம்

இராமாபாய் குடும்பத்தினர் மதக் கட்டுப்பாட்டின் படி வேறு எந்த வேலையையும் செய்ய கூடாது. அந்த நாட்களில் தென்னிந்தியாவில் கொடிய பஞ்சம் ஒன்று வந்தது. மக்கள் பல இடங்களுக்கு, இடம் பெயர்ந்து சென்று விட்டனர். இராமாபாய் குடும்பத்தினர் வேறு தொழில் எதுவும் செய்ய அறியாதவர்கள். பிச்சை எடுக்கவோ, தொழில் செய்யவோ முடியாதபடி அவர்களுடைய பிராமண அந்தஸ்து அவர்களுக்குத் தடையாய் இருந்தது. தற்கொலை செய்து கொள்ள முயற்சித்த போது கர்த்தர் அதைத் தடுத்தார். தங்குவதற்கு இடமும் கிடைக்கவில்லை. கடைசியாக கிராமத்துக்கு வெளியே உள்ள ஒரு பாழடைந்த கோயிலில் தங்கினர். அங்கு இராமாபாயின் தந்தை காலமானார். தாயும் சகோதரியும் பட்டினிக் கொடுமையால் இறந்தனர். இராமாபாய்க்கு ஆரம்ப காலத்தில் ஏற்பட்ட உபத்திரவம், பிற்காலத்தில் பல மக்களுடைய பாடுகளையும் துன்பங்களையும் துடைக்க உதவியாக இருந்தது.

### கல்கத்தா நகர் அடைதல்

இராமாபாயும் அவளுடைய அண்ணனும் தனித்து விடப்பட்டனர். அநேக முறை குளிராலும் பட்டினியாலும் துன்பப்பட்டனர். கோயில்களில் வணங்கி பல ஊர்களில் அலைந்து திரிந்தனர். கிட்டத்தட்ட நாலாயிரம் மைல்கள் நடை பயணமாகவே சென்றனர். கடைசியில் கல்கத்தா நகரை அடைந்தனர். அங்குக் கற்றுத் தேறின பிராமணர்களுடன் தொடர்பு கொண்டு புராணங்களைப் படித்துக் காட்டியதால் பணமும் ஆகாரமும் கிடைத்தது. இராமாபாய் வளர்ந்து அறிவுள்ள பெண்ணாகத் தைரியத்துடன் காணப்பட்டாள். இந்தியப் பெண்களின் முன்னேற்றத்துக்காகப் பாடுபட விரும்பினாள். அவளுடைய அறிவையும் தைரியத்தைபும் கண்டவர்கள் அவளைப் பொது மேடைகளில் பேசும்படி அடிக்கடி அழைத்தனர். கல்கத்தா நாகரின் பண்டிதர்கள் "பண்டிதை" என்ற கௌரவ பெயரைச் சூட்டினர். அன்று முதல் அவள் "பண்டிதை இராமாபாய்" என்ற பெயரில் பிரசித்தி பெற்றாள். முதன் முறையாக கல்கத்தா நகரில்தான் கிறிஸ்தவர்களோடு தொடர்பு ஏற்பட்டது. கிறிஸ்தவ கூட்டங்களுக்கு அழைக்கப்பட்டாள் கிறிஸ்தவ ஒழுக்கம், பண்புகள் அவளைக் கவர்ந்தது. சமஸ்கிருதப் பைபிள் ஒன்று அவளுக்குக் கொடுக்கப்பட்டது. அதை விளங்கிக் கொள்ள முடியாததால் பத்திரமாக வைத்துக் கொண்டாள். இந்து

சாஸ்திரங்களையும் வேதங்களையும் படித்தாலும் அதில் அவளுக்குத் திருப்தி ஏற்படவில்லை. முன்னோரின் வைதீக பாரம்பரியத்தில் இருந்த நம்பிக்கையை இழந்து விட்டாள். தனது இருபத்திரண்டாம் வயதில் பிராமணல்லாத ஒரு வங்காளி மனிதனைத் திருமணம் செய்து கொண்டாள்.

## கிறிஸ்துவனிடம் திரும்புதல்

அஸ்ஸாம் பகுதியில் தன் கணவனோடு வாழ்ந்து வந்த போது வங்காள மொழியில் எழுதப்பட்ட லூக்கா சுவிசேஷத்தை வாசித்தாள். கிறிஸ்தவ மிஷனரிகள் அவளைச் சந்தித்தனர். இயேசு கிறிஸ்துவின் போதனை, உவமை, வாழ்க்கை நிகழ்ச்சிகளை அவர்கள் மூலமாக அறிந்து கொண்டாள். கிறிஸ்தவத்தை நோக்கிச் சாயும் அவளது மனப்பான்மை அவளுடைய கணவனுக்குப் பிடிக்கவில்லை இரண்டு ஆண்டுகளில் அவரும் காலரா வியாதியால் மரித்துப் போனார். தன் மகள் மனோரம்மா என்ற குழந்தையுடன் பூனா நகருக்கு வந்து சேர்ந்தாள். அங்கு கிறிஸ்தவ போதனைகளை மறுபடியும் கேட்கும் வாய்ப்பு கிடைத்தது.

## இங்கிலாந்து செல்லுதல்



இந்தியப் பெண்களின் மேம்பாட்டிற்காக உழைக்கத் தனக்கு அதிகக் கல்வியும் பயிற்சியும் தேவை என்பதை உணர்ந்தாள். 1883 ஆம் ஆண்டு தன் மகளுடன் இங்கிலாந்து தேசத்திற்குப் பயணமானாள். அங்குக் கிறிஸ்தவ திருச்சபையின் சகோதரிகள் இராமாபாய்க்கு தங்கும் வசதிகளைக் கொடுத்தனர். அந்தத் தொடர்பால் கிறிஸ்தவப் போதனைகளையும், பெண்கள் முன்னேற்றப் பணி, அனாதைப் பெண்களின் பராமரிப்புப் பணி முதலியவற்றை அறிந்து கொண்டாள். நேரில் சென்று பார்த்து, சீரழிந்த பெண்கள் அற்புதமாய் மனம் மாறி வாழ்வதைக் கண்டாள். இந்தியப் பெண் சமுதாயத்தையும் மாற்றியமைக்க முடியும் என்று நம்பினாள். மனம் மாறுதலே வாழ்க்கை மாற்றத்தைக் கொண்டு வரும் என்று உணர்ந்து கொண்டாள்.

## மனம் மாறுதல் அடைதல்

கிறிஸ்துவின் அன்பினால் கவர்ந்து இழுக்கப்பட்ட இராமாபாய், இங்கிலாந்து திருச்சபையில் திருமுழுக்கு பெற்று உறுதி செய்யப்பட்டாள். ஆனால் கிறிஸ்துவை தன் ஆத்தும மீட்பராக இன்னும் அறியாதிருந்தாள். அமெரிக்க ஐக்கிய நாடுகளில் பல இடங்களில் சொற்பொழிவுகள் நிகழ்த்தினாலும் இதய தாகம் மட்டும் இன்னும் தணியவில்லை. வேதாகமத்தைப் படித்து ஆராய்ந்து தியானித்தாள். பிற்காலத்தில் இராமாபாய் சொன்னதாவது "கிறிஸ்தவ மதத்தைக் கண்டுபிடித்தேன். ஆனால் அதின் ஜீவ நாடியாக விளங்குவதைக் கண்டுபிடிக்கவில்லை அதனால் என் ஆவிக்குரிய வாழ்க்கையில் அதிருப்தி அடைந்தேன்" என்பதே. முடிவில் பரிசுத்த ஆவியானவரால் கிறிஸ்துவை தன் சொந்த இரட்சகராக அறிந்து கொண்டு, இரட்சிப்பின் நிச்சயத்தையும் பாவ மன்னிப்பின் மகிழ்ச்சியையும் கிறிஸ்துவில் பெற்றுக் கொண்டாள்.

## சாரதா சாதன்

கிறிஸ்துவை தன் ஆண்டவராக அறிந்து கொண்ட மாத்திரத்தில் அவரை முழுமையாய் சேவிக்க அதிக வாஞ்சையாய் இருந்தாள். ஜான் பேட்டன், ஹட்சன் டெய்லர் போன்றவர்களின் தியாக வாழ்வு இராமாபாயை மிகவும் கவர்ந்தது. தானும் ஒரு மிஷனரி ஊழியத்தை நிறுவ ஊக்குவிக்கப்பட்டாள். அதற்குரிய தேவைக்காக

முழுவதும், விசுவாசத்தில் இயேசுவையே சார்ந்து இருந்தாள். ஒதுக்கப்பட்டு நலிவுற்ற விதவைகளும் அனாதைகளும் பாவ வாழ்க்கையில் ஈடுப்பட்டிருப்பதை அறிந்தாள். அப்படிப்பட்டவர்களை மீட்கும்படியாக ஓர் இல்லத்தை நிறுவ தீர்மானித்தாள். பூனா நகரில் நிறுவப்பட்ட இல்லம் சாரதா சாதன் (ஞானத்தின் வீடு) என்று அழைக்கப்பட்டது. அப்பெண்களுக்குக் கைத்தொழில் கற்றுத்தரப்பட்டு பிற்காலத்தில் அவர்களே தொழில் செய்து பிழைத்துக்கொள்ளும் வழியைத் தேடிக்கொள்ள, பயிற்றுவிக்கப்பட்டனர். இராமாபாயை தங்களுடைய தாயாகவும், சிநேகிதியாகவும், ஆசிரியையாகவும் ஏற்றுக் கொண்டனர். கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ள யாரும் வற்புறுத்தப்படவில்லை இராமாபாயின் வாழ்க்கையைப் பார்த்து தாங்களாகவே கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டனர். கோயில் பூசாரிகளால் அடைத்து வைக்கப் பட்டிருந்த இளம் பெண்களைப் பார்த்து, தப்பி வந்தால் சாரதா சாதன் வந்து அடையலாம் என்று கூறினாள். அடைக்கலமும் கொடுத்தாள்.

நற்செய்தி கூறும் பணியில் ஈடுப்பட்ட இராமாபாய் மாட்டு வண்டிகளில் பிரயாணம் செய்து துணிமணிகள், உணவுப் பொருட்கள் ஆகியவற்றை தான் போகிற இடங்களில் ஏழை எளியவர்களுக்கு அளித்து வந்தாள். எல்லாத் தேவைகளுக்கும் தேவனையே சார்ந்து இருந்தாள் இந்து குருக்கள் அவரை எதிர்த்தனர். தேவதாசிகளை விடுவித்ததே அதற்குக் காரணம் குஜராத் மாநிலத்தைச் சேர்ந்த ஒரு பெண் பம்பாய் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டாள் கொடுமைப்படுத்திய பூசாரிகளின் கைகளுக்குத் தப்பும்படி அவள் அப்படி அனுமதிக்கப்பட்டாள். பூசாரியின் ஆட்கள் அவளைக் கண்டுபிடித்து தங்களோடு வரும்படி வற்புறுத்தினர். அந்தப் பெண் மறுத்து விட்டாள். சவுக்கடியால் தன்னை வதைப்பார்கள் என்று அவளுக்குத் தெரியும். அவள் தப்பிப் போகாதபடி மருத்துவ மனையைக் காவல் காத்தனர். இராமாபாய் தன் நண்பர்களின் உதவியால் அவளைத் தப்புவித்து சாரதா சாதனுக்கு கொண்டு வந்து விட்டாள். இராமாபாயின் புகழ் இந்தியாவிலும் வெளி நாடுகளிலும் பரவலாயிற்று. சரோஜினி நாயுடு போன்ற இந்திய தலைவர்கள் இராமாபாயைப் பாராட்டினார்கள். "இந்தியாவின் தலைசிறந்த புதல்வி" என்று புகழ்ந்தனர். வெளி நாட்டினர் பண உதவிகள், ஜெபங்கள் மூலமாய் இவருடைய ஊழியத்தை ஆதரித்து ஊக்குவித்தனர்.

## முக்தி



பண்டிதை இராமாபாய் அவர்களின் சேவைகள் வேகமாய் வியாபித்துப் பரவியது. சாரதா சாதன் இல்லத்தில் சேர்க்கப்பட்ட ஏராளமான பெண்களுக்கு இடவசதி போதிய அளவு இல்லாமையால் பூனாவில் உள்ள கேட்கான் என்ற இடத்தில் நிலம் வாங்கப்பட்டு இல்லங்கள் கட்டப்பட்டன. அவ்விடத்திற்கு முக்தி (இரட்சிப்பு) என்று பெயர் கொடுக்கப்பட்டது. அதிக ஜெபத்துடன் தொடங்கப்பட்ட அந்த இல்லத்திற்கு வரும் எல்லாப் பெண்களுக்கும் கைத்தொழில்கள் கற்றுத் தரப்பட்டன. பிற்காலத்தில் அவர்கள் தாங்களாகவே கைத்தொழில் செய்து பிழைக்க வழி நடத்தப்பட்டனர். அநேகர் செவிலியராகவும், நெசவு செய்பவர்களாகவும், தோட்ட வேலை செய்பவர்களாகவும் வெளியேறினர்.

மத்திய இந்தியாவில் ஒரு கடும் பஞ்சம் தோன்றியது. மக்கள் பட்டினியால் மடிந்தனர். பலர் அலைந்து திரிந்தனர். இராமாபாய் தனக்கு சிறு வயதில் ஏற்பட்ட அனுபவத்தை நினைவு கூர்ந்தார். பஞ்சத்தால் பாதிக்கப்பட்ட பலருக்கு ஆதரவு அளிக்க விரும்பினார் அவர் ஜெபித்து தன் தேவைகளை எழுதி வந்தார். அவற்றைப் படித்த மக்கள் உதவிகளை அனுப்பினார்கள். பாதிக்கப்பட்ட அனைவரையும் ஏற்று ஆதரித்தார்.

## நல்ல போராட்டம்



திருப்பணியில் ஈடுபட்டிருந்த இராமாபாய் எப்போதும் சுறுசுறுப்பாகவும் வேலைகளை நன்கு கவனிக்கிறவராகவும் காணப்பட்டார். பயணம் செய்து, போதனை செய்கிறவராகச் சுற்றித் திரிந்தார் மராத்தி மொழியில் பாட்டுகளை இயற்றினார். சிறிய ஆரம்பத்தில் இருந்த இரண்டு இல்லங்கள் மூக்தி எனப்பட்ட சிறப்பான இடமாக அமைந்தது சுமார் இரண்டாயிரம் பெண்களும் பெண் பிள்ளைகளும் அவ்வில்லங்களில் அடைக்கலம் பெற்று இருந்தனர். நூற்றுக்கு மேற்பட்ட உதவியாளர்கள் பணிபுரிந்தனர் முடிவில் 1922 ஆம் ஆண்டு தான் நேசித்து வணங்கின ஆண்டவரை அடைந்தார். "எல்லாவற்றையும் நன்றாய்ச் செய்தாய்" என்று அழைத்த பரம ராஜாவிடம் பலனைப் பெற்றுக் கொள்ள பரலோகத்தைச் சென்றடைந்தார். இன்னும் அவர்களது சேவையும், திருப்பணியும் நிலைத்து நிற்கிறது.

முக்தி மிஷன் கேட்கான் என்ற இடத்தில் இன்னும் நலிவுற்றோர், குடும்பம் இழந்தோர், அநாதைகள் ஆதரிக்கப்படுகின்றனர். நூற்றுக்கணக்கான பெண்கள் வாழ்க்கையில் மறுமலர்ச்சி பெற்று சமுதாயத்தில் பணி செய்கின்றனர். உயிர்த்தெழுதலின் நாளிலே, கிறிஸ்து வரும் போது அவரை நம்பினோர் உயிர்ப்பிக்கப்படுவார்கள். அநேக பெண்களும் பிள்ளைகளும் உயிர்த்தெழுதலின் நாளிலே அவர்களுடைய மகிழ்ச்சியின் வாழ்க்கைக்குக் காரணமாயிருந்த பண்டித இராமாபாயை வாழ்த்துவார்கள்.

கைவிடப்பட்ட ஓர் எளிய பிராமண விதவையினால் இதை எப்படிச் சாதிக்க முடிந்தது என்று பலருக்கு ஆச்சரியத்தைக் கொடுக்கிறது. தன்னுடைய சொந்த மக்களாலேயே வெறுத்துத் தள்ளப்பட்ட ஒரு பெண்ணால் எப்படி கடவுளுக்கும் சமுதாயத்திற்கும் தொண்டாற்ற முடிந்தது என்று வியக்கின்றனர். இதன் இரகசியம் என்னவென்றால், அவள் தன்னுடைய ஒரே ஒரு வாழ்க்கையைக் கிறிஸ்துவின் கரத்தில் ஒப்படைத்தாள். கிறிஸ்து அவளுக்கு ஒரு நோக்கத்தைக் கொடுத்து அவளது வாழ்க்கையை பயனுடையதாக மாற்றினார். இறைவனின் (கிறிஸ்துவின்) பெலத்தால் அதைச் சாதிக்க முடிந்தது இராமாபாய் சொன்னதாவது

**"என்னைப் பயன்படுத்தின அதே தேவன் உங்களையும் பயன்படுத்துவார்.**
**ஒரே ஒரு வாழ்வுதான். அது சீக்கிரம் கடந்து போகும்.**
**கிறிஸ்துவுக்கென்று செய்யப்பட்டது எதுவோ அதுவே நிலைத்து நிற்கும்"**

- சகோ. சுந்தரி.

# எசேக்கியா

(யெகோவாவின் பலம்)



காலம் : கிமு 726-670

தகப்பன் : ஆகாஸ்

தாயின் பெயர் : ஆடா

எசேக்கியா யூதாவின் 12ஆம் ராஜாவாயிருந்தான். இவன் தன்னுடைய 25ஆம் வயதில் ராஜாவானான். இவன் கர்த்தரின் பார்வைக்கு செம்மை யானதைச் செய்தான். இவன் மேடைகளை அகற்றி, சிலைகளைத் தகர்த்து, விக்கிர தோப்புகளை வெட்டி, மோசே பண்ணியிருந்த வெண்கல சர்ப்பத்தை உடைத்துப் போட்டான். அவன் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரின் மேல் வைத்த நம்பிக்கையிலே, அவனுக்குப் பின்னும் அவனுக்கு முன்னும் இருந்த யூதாவின் ராஜாக்களெல்லாரிலும் அவனைப் போல் ஒருவனும் இருந்ததில்லை. அவன் கர்த்தரை விட்டு பின்வாங்காமால், அவரை சார்ந்திருந்து, கர்த்தர் மோசேக்கு கற்பித்த, அவருடைய கற்பனைகளைக் கைகொண்டு நடந்தான். ஆகையால் கர்த்தர் அவனோடிருந்தார். அவள் போகிற இடம் எங்கும் அவனுக்கு அநுகூலமாயிற்று. பின்பு சிதறியிருந்த சகல இஸ்ரவேல் ஜனங்களையும் கூட்டி ஒரு விசேஷ பஸ்கா பண்டிகையை 14 நாட்களாய் நடத்தினார்.

இவன் பெலிஸ்தருக்கு விரோதமாய் யுத்தம் செய்து அவர்களைத் தோற்கடித்தான். அசீரிய ராஜாவையும் எதிர்த்ததினால் யுத்தம் ஆரம்பித்தது. எசேக்கியா வியாதிப்பட்டபொழுது எசாயா தீர்க்கதரிசி இவனை சந்தித்து மரணத்துக்கு ஆயத்தப்படும்படி சொன்னான். அதினிமித்தம் அவன் துக்கித்து அழுதபொழுது கர்த்தர் 15 வருடம் அவனுடைய ஆயுசு நாட்களை கூட்டிக்கொடுத்தார். இதன்பின் அசீரியர் இவனுக்கு விரோதமாய் வந்தபொழுது ஏசாயாவின் ஜெபத்தினிமித்தம் கர்த்தருடைய தூதன் அசீரியரைச் சங்கரித்தார். எசேக்கியா ஆசாரியர் லேவியரை அவர்கள் ஊழியத்தின்படி திட்டப்படுத்தி, துதித்து ஸ்தோத்தரிக்க ஒழுங்குப்படுத்தினார். எசேக்கியா தனக்கு பட்டணங்களைக் கட்டுவித்தான். கீயோன் ஆற்றிலே அணை கட்டினான். தேவன் அவனுக்கு மகா திரளான ஆஸ்தியைக் கொடுத்தான். அவன் செய்ததெல்லாம் வாய்த்தது. எசேக்கியா ராஜா 29 வருடம் அரசாண்டு பின் மரித்தான்.

நாமும் நம் வாழ்க்கையில் கர்த்தர் மேல் நம்பிக்கை வைத்து அவருடைய கற்பனை களைக் கைக்கொண்டு வாழ கர்த்தர் கிருபை தருவாராக.

**வசன இருப்பிடம்**

**2 ராஜாக்கள் 16:20, 18:2-12**

**2 நாளாகமம் 31:2**

# THE POWER OF BLESSING




This blessed word of God is one of the powerful word of truth, and life filled with revelation for salvation, deliverance, healing and prosperity. Deeper revelation of this scripture will deliver us from all problems and challenges that we are facing in our life. Most of us think that it's about giving some coins or some change to the poor, or it is about giving some money to poor God as He does not have money to build His church or provide for his servants. So, we are doing a favor to God by giving some money to Him and his servants (pastors). For a very long time, these cursed thoughts have stolen the revelation of the power of blessing to work in our life. When God says give, it's not a request, it's a COMMAND. He didn't say please give, or He didn't say if you can give, give. There is no difference if you are rich or poor. Give and only then it will be given unto you. It's a principle, as a law like the law of gravity, whatever you throw up it comes down, it has to come down so is this law which God has set into motion; however, in this law there is a relationship between God and man spiritually and materially and physically. God is not time bound yet when he was on this earth even he lived under the time and under the same law because he loved us. (John 3:16 God so loved us He.. gave…. us the only begotten son ..)

Most of them think that they are poor so how can they give when they have nothing. God said to the poor to give, so He could Give. Most of us are poor because we didn't give. If you say I was born in a poor family, then you should go back to the generation who started the mess, Malachi 3:7. Some would even say if I have then I will give but I would say that they will not give even if God gives them. They will come with excuses saying this is all I have got and stories like I have to repay that loan, I have to repay that/this person, all I have is this how I can give. In fact few days back, they didn't even have that! It is clear that the power of curse is working in them. Giving is a covenant law. When God wanted to bless Abraham, God said Abraham you first give me your son, so I can give you my son, and more.

